**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

**முன்னிலை.** திரு.A.பாலகிருஷ்ணன், B.A.,B.L.,
சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்
2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் நாள் திங்கட்கிழமை

**R.E.P.No.46/2023**
**in**
**Arb.No.373/2018**

M/s Shriram Transport Finance Co.Ltd.,
அதன் சார்பாக திரு.P.செந்தில்குமார் ... மனுதாரர்

/இடையே/

1.B.ரவி
2.K.R.கிருஷ்ணமூர்த்தி
3.R.நளினி ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு கடந்த 20.11.2025-ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.K.பிரகாஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.R.சோமசுந்தரம், அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

1. நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தை ஏலம் விட்டு தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 11(2) இன் கீழ் மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:-**

i) இசைவு நடுவர் நீதிமன்றத்தால் மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு எதிராக Arbitration Proceedings No.373/2018 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 28.12.2018-ம் தேதியில் தாவா தொகையான ரூ.1,98,549/-த்தை தாவா தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 18% ஆண்டு வட்டியுடன் வாதிக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ii) எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள் மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை தொகையை செலுத்தவில்லை எனவும், எனவே, மனுச் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தொகையை வசூல்

செய்து கொடுக்க வேண்டுமென்று கோரி மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார்.

3. 1**<u>–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

(1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் 2,3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது)

i) மனுதாரர் மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் தவறானவவை ஆகும். எதிர்மனுதாரர் மட்டுமே மேற்படி தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் என மனுதாரர் கூறியுள்ளது தவறானது ஆகும். மனுதாரர் தரப்பில் தக்க ஆவணங்கள் இல்லாமல் மனுவின் உண்மைகளை மறைத்து தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்பட்டால், தீர்ப்பில் கடனாளியும் சம்பந்தப்பட்ட மற்றவர்களும் ஈடுசெய்ய முடியாத இழப்பு மற்றும் கஷ்டம் ஏற்படும்.

ii) மனுதாரரின் Arb.No.46/2023 தீர்ப்பிற்கு எதிராக சில முக்கிய ஆவணங்களுடன் மேல்முறையீட்டு மனுவைத் எதிர்மனுதாரர் தாக்கல் செய்ய போகிறார். 3–ம் எதிர்மனுதாரர் எந்த ஆவணத்திலும் அல்லது ஒப்பந்தத்திலும் ஒருபோதும் 1–ம் எதிர்மனுதாரருக்காக கையெழுத்து எதுவும் போடவில்லை.

iii) எனவே, மனுதாரரின் இம்மனுவினை 1–ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறுகிறார்.

4.இருதரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கப்படதக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்ப்பு:–</u>**

i) மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகளுக்கு எதிராக Arb.No.373/2018–ல் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 28.12.2018–ம் தேதியில் இசைவு தீர்ப்பாளரால் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது.

ii) Arb.No.373/2018 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றும் வகையில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஏலம் விட்டு தீர்ப்பாணை தொகையை நிறைவேற்ற வேண்டி மனுதாரரால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் மேற்படி Arb.No.373/2018 உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்ய

இருப்பதாக கூறியுள்ளார். ஆனால் மேற்படி Arb.No.373/2018 உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு விட்டதாகவோ, இந்நீதிமன்றத்தின் நிறைவேற்று மனுவினை நிறுத்தி வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவோ எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

iv) மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் கோபிசெட்டிபாளையம் இணை 1 சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.830/2010 ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் இருந்து நிறைவேற்று மனுவில் கண்ட சொத்துக்கள் 3-ம் எதிர்மனுதாரருக்கு உரிமைப்பட்டது என்பது தெரியவருகிறது.

v) Arb.No.373/2018-ன் தீர்ப்பு ரத்து செய்யப்படாத நிலையிலும், இந்நீதிமன்றத்தின் நிறைவேற்று மனுவினை நிறுத்தி வைப்பதற்கு மேலமை நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையிலும் நிறைவேற்று மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வகையில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காணுகிறது.

7. **எனவே** முடிவாக, மனுவில் கண்ட சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. படி கட்டளை செலுத்த 3 நாட்கள் கால அவகாசம். அழைக்க 18.02.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்து இன்று இந்த உத்தரவு 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A BALAKRISHNAN
Digitally signed by A BALAKRISHNAN
Date: 2025.12.15 15:37:38 +0530

**சார்பு நீதிபதி,**

**கோபிசெட்டிபாளையம்.**

**1. இருதரப்பிலும் குறியீடு செய்யப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-**

இல்லை

A BALAKRISHNAN
Digitally signed by A BALAKRISHNAN
Date: 2025.12.15 15:37:50 +0530

**சார்பு நீதிபதி,**

**கோபிசெட்டிபாளையம்.**